Written by - எம். ஜயெராமசர்மா .. மலெ்பணே் .. அவுஸ்திரலேியா -
Wednesday, 19 July 2017 15:47 - Last Updated Wednesday, 19 July 2017 15:50

மட்டுநகர் வாவியிலே மீ ன்கள் பாடும்
மகளிரது தாலாட்டில் தமிழ் மணக்கும்
கட்டளகர் வாயிலலெ்லாம் கவி பிறக்கும்
களனிகளில் நறெ்பயிர்கள் களித்து நிறக்கும்
இட்டமுடன் கமுகு தனெ்னை ஓங்கிநிறக்கும்
இசபைாடிக் கூயில்களெங்கும் மயக்கி நிறக்கும்
எத்திக்கும் இயறகவைளம் தன்னைப் பறெ்ற
எழில் பறெ்ற இடமே கிழக்கிலங்கையாகும் ! ஈழத்தின் கிழக்காக இரக்கின்ற
காரதைீ வில்
ஞானமாய் வந்துதித்தார் நம்துறவி விபுலாநந்தர்
துறவியாய் ஆனாலும் தயதமிழ் துறக்காமல்
அமதையிாய் பணிசயெ்து அவர்யர்ந்தார் இமயமனெ !

விஞ்ஞானம் படித்தாலும் விரும்பியே தமிழ்படித்தார்
நல்ஞானம் அவரிடத்தில் நயமோடு இணைந்ததுவே
சொல்ஞானம் சுவஞானம் எல்லாமும் சரேந்ததனால்
சலெ்லுமிட மலெ்லாமே சிறப்பவர்க்கு சரேந்தனவே !

ஈழத்தில் பிறந்தாலும் இந்தியா அவர்வாழ்வின்
கோலத்தை மாறற்றியதால் கூனற்றறேி அவர்நின்றார்
பண்டிதராயிருந்த அவர் பல்கலைக்கழகம் தன்னில்
பலபரேின் பாராட்டால் பதவியிலே உயர்ந்துநின்றார் !

பண்டிதரால் வறெுக்கப்பட்ட பாரதியார் படைப்புக்களை
பண்டிதராய் இருந்தவரே பலபரேும் அறியச்சயெ்தார்
பல்கலைக்கழம் தன்னில் பாரதிக்கு இடம்கொடுத்தது

கவிதை : முத்தமிழ் வித்தகர் !

Written by - எம் . ஜெயராமசர்மா .. மெல்பேண் .. அவுஸ்திரேலியா -
Wednesday, 19 July 2017 15:47 - Last Updated Wednesday, 19 July 2017 15:50

பாடமாய் படிப்பித்தார் பண்பாளர் விபுலானந்தர் !

பேராசிரிராய் பெருமையுடன் பணி ஆற்றி
ஆராத காதலுடன் அவர் தமிழை வளர்த்தாரே
தீராத பசியோடு தினமுமவர் தமிழ்கற்று
யாருமே தொட்டிரா யாழ்தொட்டு நூல்செய்தார் !

பலமொழிகள் தெரிந்தாலும் பற்றெல்லாம் தமிழ்மீது
அவர்கொண்டு இருந்ததனால் அறிஞரெலாம் போற்றினரே
இயலிசை நாடகத்துள் என்றுமவர் இணைந்ததனால்
முத்தமிழ் வித்தகராய் எத்திக்கும் திகழ்ந்தாரே !

துறவியாய் மாறினாலும் தமிழினைத் துறக்கவொண்ணா
அறிவுசால் ஆசானாகி அருந்தமிழ் வளர்த்தே நின்றார்
துறைபல கற்றுணர்ந்து தூயநற் பணிகள் ஆற்றி
கறையிலா நெஞ்சங்கொண்டார் கருநிற அண்ணல்தாமும் !

ஆசானாய் அதிபராகி அதியுயர் பதவிபெற்று
மாசறு குணத்தனாக மாண்புறு மனத்தைப் பெற்று
பாசமாம் வினையைப் போக்கும் பக்குவகுருவமாகி
தேசமே போற்றும் வண்ணம் திகழ்ந்தனர் விபுலாநந்தர் !

jeyaramiyer@yahoo.com.au

2 / 2